க்ரோதி ஃஸு ஆனி மீ
ஜூன் - ஜூலை 2024

மலர்: 7
இதழ்: 3

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்





MONTHLY NEWSLETTER FROM:

## SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM

MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799, 044 - 43863747
Email: svdd.mylai@gmail.com Web: www.svdd.com





ப்ரஹ்மோத்ஸவம்

க்ரோதி வூ ஆனி மீ
ஜூன் - ஜூலை 2024

மலர்: 7
இதழ்: 3

ஸ்ரீ:

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

**காலை**

**ஞாயிறு முதல் புதன் வரை**

6.30 - விச்வரூபம்
8.30 - திருவாராதனம்
9.45 - சாற்றுமுறை

**வியாழன் முதல் சனி வரை**

6.00 - விச்வரூபம்
7.30 - பொது தரிசனம்

12.00 - உச்சிகாலம்

**மாலை**

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

**தர்மகர்த்தாக்கள்:**
ஸ்ரீ அழிசூர் R. ராகவன் | ஸ்ரீ R. அனந்தபத்மநாபன் | ஸ்ரீ R. முகுந்தன்

**Editorial Board :**
ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

**Photo Courtesy:** M.K.S. Mohan Babu, P.S. Anand & Thillai Ranganathan
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed: ye**SK**ay designs



**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 044 - 24953799, 43863747
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com



ஸ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்[3]ரி ஸமம் ஸ்தா[2]நம் ப்[3]ரஹ்மாண்டே[3] நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே[3]வோ ந பூ[4]தோ ந ப[4]விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்!

உபய வேதங்களான ஆழ்வார்களின் ஸ்ரீஸூக்திகளும் எம்பெருமானின் மூச்சுக் காற்றாகிய வேதங்களும் நம் ஸம்ப்ரதாயத்தின் இரு கண்கள் போன்றவை. எனவே தான் ‘செந்தமிழும் வடகலையும் திகழ்ந்த நாவர்’ என்று திருமங்கை மன்னன் முன்மொழிய, ‘தொண்டைமண்டல வேதியர் வாழவே, தூய தென்மறை வல்லவர் வாழவே!’ என்று அக்கலியனுரை குடிகொண்ட கருத்துடையோனாகிய தூப்புல் குலமணி வழிமொழிந்தார்.

இது **ஆனி** மாதம். ஆழ்வார்களின் ஸ்ரீஸூக்திகளுக்கும் **(ஆ)**, நிகமங்கள் **(னி)** என்று அழைக்கப்பெறும் நான்மறைகளுக்குமான ஸாம்யத்தை அநுஸந்தித்த இரண்டு மஹநீயர்கள் அவதரித்த மாதம். இருவரும் உபய வேதாந்திகளாகவும் மஹா சாஸ்த்ரஜ்ஞர்களாகவும் விளங்கியவர்கள்.

முன்னவர் கல்பஸூத்ரத்திற்கு வ்யாக்யானம் அருளி, ஏரணி பல்லாண்டு முதல் பாட்டு நானூற்றெழுபத்து மூன்றை நமக்காக வழங்கிய பட்டர்பிரானாகிய பெரியாழ்வார். பின்னவர் யோகசாஸ்த்ர பண்டிதராகத் திகழ்ந்து நாலாயிரத்தை நானிலத்துக்கு அளித்த நாதமுனிகள்.

‘எண்ணா நாளும் இருக்கு எசுச் சாம வேத நாள்மலர் கொண்டு உனபாதம் நண்ணாநாள் அவை தத்துறுமாகில் அன்று எனக்கு அவை பட்டினி நாளே’ என்று மறைகளை எம்பெருமானின் மலரடிகளில் அப்போதலர்ந்த மலர்களாக அணிவித்து அவனை வணங்காத நாள் தனக்கு உண்ணா நாளே என்று அறுதியிட்டார் பெரியாழ்வார். தாளம் வழங்கித் தமிழ்மறைகளை இன்னிசைத்துத் தந்து வள்ளலானார் நாதமுனிகள்.

பெருஞ்சோதி தனில் தோன்றிய புதுவைக்கோன், வேத மந்திரங்களின் உயர்ந்த கருத்துக்களை தனது பல்லாண்டுப் பதிகத்தில் எப்படிப் பகருகிறார் என உரைக்கும் கட்டுரையும், வேதங்களை உலகிற்கு மீட்டுக்கொடுத்த ஹயக்ரீவ அவதாரத்திற்கும், அநுஷத்தில் அவதரித்து அருளிச்செயல்களை மீட்டுக்கொடுத்த நாதமுனிகளுக்கும் உள்ள ஒப்புமையை விளக்குவதான வ்யாஸமும் இந்த இதழின் சிறப்பு அம்சங்கள்.

சந்தமிகு தமிழ்மறையோன் தூப்புல் தோன்றும் வேதாந்தகுரு வேதப்பொருளைத் தனது ஸ்தோத்ரங்களில் கையாண்டுள்ள விதத்தை விளக்கும் காப்பகக் கட்டுரையும், வேதமனைத்துக்கும் வித்தான திருப்பாவையில் பொதிந்துள்ள அர்த்தபஞ்சகக் கோட்பாடுகளை எடுத்துரைக்கும் கட்டுரையும் மெருகு சேர்க்க, ஸ்ரீ ஸ்ரீநிவாஸப்பெருமாள் ப்ரஹ்மோத்ஸவத்தின் வண்ணப்படங்களுடன் இந்த இதழ் உங்கள் கையில்.

ஸ்ரீ:

# The Curious Query 'What Next?'

## FROM THE DESK OF TRUSTEES

After the memorable year-long Sathamana Utsavam Celebrations, the question lingering in every devotee's mind is "What Next?" The centenary festivities have been a resounding success, thanks to their unwavering support and participation. From the elaborate rituals and cultural programmes to the community service initiatives, every event was a reflection of our collective dedication and reverence. We have not only honoured our past but also set a strong foundation for the future.

Fortunately for our temple, there is no dearth of celebrations, and we are having Utsavams on almost 300 days in a year. And from now on, we can celebrate the Utsavams every year as centenary year.

**Joy and gratitude**

As we reflect on the past month, we are filled with immense joy and gratitude for the successful celebration of the Brahmotsavam festival. The Brahmotsavam is a time-honoured tradition with vibrant processions, elaborate rituals and cultural programmes. On the third day of Brahmotsavam, on the occasion of Garuda Seva, HH Srirangam Srimad Andavan Sri Varaha Mahadesikan performed Mangalaasaasanam. It was heartening to see devotees of all ages come together in quest of service, reaffirming the timeless values that our temple upholds.

The Brahmotsavam was followed by the Thotta Utsavam in which Lord Srinivasa visited His devotees' places to bless them. There was Special Thirumanjanam and Thadheeyaradhanai at Srirangam Srimad Andavan Asramam, Alwarpet.

In the forthcoming month, in addition to the regular celebrations, we are planning to have the Sri Sudarsana Homam on the Sudarsana Jayanthi Day falling on the 14th July (Sunday) this year.

Further, to document the 100th Year of Prathishta Dinam, the Temple desires to bring out a **Commemorative Souvenir** to acknowledge, recognise and remember with gratitude the service rendered by many well-wishers, devotees and patrons to this Devasthanam. The Souvenir would also be a divine treat in the form of photographs covering the highlights of the grand Centenary Celebrations and also about the 100 years of activities of the Temple and also carry articles by renowned scholars, interspersed with advertisements.



It is planned to release the Souvenir in the month of July and we invite all devotees to participate in these events and continue to receive the divine blessings. Their presence and involvement are what make these celebrations meaningful and spiritually enriching.

We also take this opportunity to thank all the volunteers and devotees who contributed their time, effort and resources to make the Brahmotsavam festival a grand success. May Lord Srinivasa shower his divine blessings upon all of them and their families.

ஸ்ரீ:

# க்ரோதி வருட ஆனி மாத பஞ்சாங்கம்

| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | கிழமை | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| ஜூன் / ஜூலை | ஆனி | | | | | |
| 15.06.2024 | 1 | நவமி | சனி | உத்தரம் / ஹஸ்தம் | மாதப்பிறப்பு காலை பெருமாள், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை பெருமாள் வீதிபுறப்பாடு, பின்பு தாயார் உள்புறப்பாடு | மாதப்பிறப்பு: ஸ்ரீ M.V. ஸ்ரீநிவாஸன் குடும்பத்தினர். உத்தரம்: ஸ்ரீ S.V.S. ராகவன் பண்ட் |
| 16.06.2024 | 2 | தசமி | ஞாயிறு | ஹஸ்தம் | காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு | ஸ்ரீ R. முகுந்தன் |
| 17.06.2024 | 3 | ஏகாதசி | திங்கள் | சித்திரை | மதுரகவிகள் | |
| 18.06.2024 | 4 | ஏகாதசி | செவ்வாய் | ஸ்வாதி | காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை பெருமாள் வீதிபுறப்பாடு | ஸ்ரீமதி S. பாமா. C/o. ஸ்ரீ N. ஸ்ரீகாந்த் |
| 19.06.2024 | 5 | த்வாதசி / த்ரயோதசி | புதன் | விசாகம் | நம்மாழ்வார் | |
| 20.06.2024 | 6 | த்ரயோதசி / சதுர்தசி | வியாழன் | அனுஷம் | ஸ்ரீமந்நாதமுனிகள் திருநக்ஷத்ரம். காலை பெருமாள், நாதமுனிகள் திருமஞ்ஜனம். மாலை பெருமாள், நாதமுனிகள் வீதிபுறப்பாடு. இரவு ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | திருமஞ்ஜனம்: ஸ்ரீமதி ருக்மணி அம்மாள் பண்ட். புறப்பாடு : ஸ்ரீ A. வாஸுதேவன் – N.V. பாலாஜி |
| 21.06.2024 | 7 | சதுர்தசி / பௌர்ணமி | வெள்ளி | கேட்டை | காலை பெருமாள் தாயார் மூலவர், உத்ஸவர், தாயார் உத்ஸவர் திருமஞ் ஜனம. மாலை தாயார் உள்புறப்பாடு | ஸ்ரீ அத்திகிரி அருளாளன் |
| 22.06.2024 | 8 | பௌர்ணமி | சனி | மூலம் | காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு | ஸ்ரீ N. ஸ்ரீனிவாஸன் |
| 23.06.2024 | 9 | ப்ரதமை / த்விதீயை | ஞாயிறு | பூராடம் | ஸேனைநாதன் | |
| 24.06.2024 | 10 | த்ருதீயை | திங்கள் | உத்தராடம் | ஆளவந்தார் | |
| 25.06.2024 | 11 | சதுர்த்தி | செவ்வாய் | ச்ரவணம் | பெருமாள், தேசிகன் திருமஞ் ஜனம். மாலை வீதிப்புறப்பாடு, ஸேவாகாலம், சாற்றுமுறை | கொடநகர் ஸ்ரீ S. துரை ஸ்வாமி ஐயங்கார் பண்ட். C/o.ஸ்ரீ E. ஸ்ரீதரன் |
| 26.06.2024 | 12 | பஞ்சமி | புதன் | அவிட்டம் | பூதத்தாழ்வார் | |
| 27.06.2024 | 13 | ஷஷ்டி | வியாழன் | சதயம் | பேயாழ்வார் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு | ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீ பாதம் கைங்கர்யம் அஸோஸியேஷன் |
| 28.06.2024 | 14 | ஸப்தமி | வெள்ளி | பூரட்டாதி | காலை பெருமாள் தாயார் மூலவர், உத்ஸவர், தாயார் உத்ஸவர் திருமஞ் ஜனம. மாலை தாயார் உள்புறப்பாடு | ஸ்ரீ அழிசூர் நாராயணன் |
| 29.06.2024 | 15 | அஷ்டமி | சனி | உத்தரட்டாதி | திருமால்வடை | |

ஸ்ரீ:

# க்ரோதி வருட ஆனி மாத பஞ்சாங்கம்

| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | கிழமை | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| ஜூன் / ஜூலை | ஆனி | | | | | |
| 30.06.2024 | 16 | நவமி | ஞாயிறு | ரேவதி | திருமால்வடை | |
| 01.07.2024 | 17 | தசமி / ஏகாதசி | திங்கள் | அச்வினி / பரணி | திருமால்வடை | |
| 02.07.2024 | 18 | ஏகாதசி | செவ்வாய் | பரணி / க்ருத்திகை | காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ் ஜனம். மாலை வீதிப்புறப்பாடு | ஸ்ரீ V. ராஜகோபாலன் குடும்பத்தினர் |
| 03.07.2024 | 19 | த்வாதசி | புதன் | ரோஹிணி | கண்ணன் ஆஸ்தானம் | |
| 04.07.2024 | 20 | த்ரயோதசி / சதுர்தசி | வியாழன் | ம்ருகசீர்ஷம் | திருக்கச்சி நம்பிகள் | |
| 05.07.2024 | 21 | அமாவாசை | வெள்ளி | திருவாதிரை | காலை பெருமாள், தாயார் மூலவர், உத்ஸவர், தாயார் உத்ஸவர் திருமஞ் ஜனம். மாலை தாயார் உள்புறப்பாடு | அமாவாசை: ஸ்ரீ M.A. பார்த்தஸாரதி குடும்பத்தினர்; தாயார் உத்ஸவம்: ஸ்ரீ ஸ்ரீராமன் |
| 06.07.2024 | 22 | ப்ரதமை | சனி | புனர்வஸூ | திருமால்வடை | |
| 07.07 2024 | 23 | த்விதீயை | ஞாயிறு | புனர்வஸூ / புஷ்யம் | கோடை உத்ஸவம் 1ம் நாள்: காலை: பெருமாள், தாயார் திருமஞ்ஜனம். மாலை பெருமாள் வீதிபுறப்பாடு | ஸ்ரீ K.S. ஸந்தானம் – ஸ்ரீ K. வரதராஜன் |
| 08.07.2024 | 24 | த்ருதீயை | திங்கள் | புஷ்யம் / ஆயில்யம் | கோடை உத்ஸவம் 2ம் நாள்: காலை பெருமாள், தாயார் திருமஞ்ஜனம். மாலை பெருமாள் வீதிபுறப்பாடு | ஸ்ரீ V.P. ப்ரேம்குமார் – ஸ்ரீ C.V. கோபால் |
| 09.07.2024 | 25 | த்ருதீயை / சதுர்த்தி | செவ்வாய் | ஆயில்யம் | கோடை உத்ஸவம் 3ம் நாள்: காலை பெருமாள், தாயார் திருமஞ்ஜனம். மாலை பெருமாள் வீதிபுறப்பாடு | ஸ்ரீ L.N. ஸ்ரீநிவாஸன் – ஸ்ரீ K. ரங்கராஜன் |
| 10.07.2024 | 26 | சதுர்த்தி | புதன் | மகம் | கோடை உத்ஸவம் 4ம் நாள்: காலை பெருமாள், தாயார் திருமஞ்ஜனம். மாலை பெருமாள் வீதிபுறப்பாடு | ஸ்ரீ T.P. ரங்கராஜன் – ஸ்ரீ G. பத்ரி நாராயணன் |
| 11.07.2024 | 27 | பஞ்சமி / ஷஷ்டி | வியாழன் | பூரம் | கோடை உத்ஸவம் 5ம் நாள்: காலை பெருமாள், தாயார் திருமஞ்ஜனம். மாலை பெருமாள் வீதிபுறப்பாடு | ஸ்ரீ N. கஸ்தூரி ரங்கன் – ஸ்ரீமதி ஸ்ரீநிதி மோஹன் |
| 12.07.2024 | 28 | ஷஷ்டி | வெள்ளி | உத்தரம் | கோடை உத்ஸவம் 6ம்: காலை: பெருமாள், தாயார் திருமஞ்ஜனம். மாலை பெருமாள் வீதிபுறப்பாடு. பின்பு தாயார் உள்புறப்பாடு | ஸ்ரீ Dr. P. க்ருஷ்ண மூர்த்தி – ஸ்ரீ N. ஸ்ரீநிவாஸன் |
| 13.07.2024 | 29 | ஸப்தமி | சனி | ஹஸ்தம் | கோடை உத்ஸவம் 7ம் நாள்: காலை பெருமாள், தாயார் திருமஞ்ஜனம். மாலை பெருமாள் வீதிபுறப்பாடு. | ஸ்ரீ R.S. ராகவன் – ஸ்ரீ N.R. ஸ்ரீநிவாஸா சார்யர் குடும்பத்தினர் |
| 14.07.2024 | 30 | அஷ்டமி | ஞாயிறு | சித்திரை | ஸ்ரீ ஸுதர்சன ஜயந்தி. சக்கரத் தாழ்வார் மூலவர், உத்ஸவர் திருமஞ்ஜனம், ஆஸ்தானம் | ஸ்ரீ N.R. ராமஸ்வாமி |

ஸ்ரீ:

## க்ரோதி வருட ஆனி மாத பஞ்சாங்கம்

| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | கிழமை | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| ஜூன் / ஜூலை | ஆனி | | | | | |
| 15.07.2024 | 31 | நவமி | திங்கள் | ஸ்வாதி | பெரியாழ்வார் திருநக்ஷத்ரம். காலை பெருமாள், ஆழ்வார் திருமஞ்ஜனம், சாற்றுமுறை. மாலை பெருமாள் சின்ன கருடன், ஆழ்வார் யானை வாஹனம் வீதிபுறப்பாடு, ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ மாடபூஷி ஸுதர்சனம் ஐயங்கார் பண்ட் |
| 16.07.2024 | 32 | தசமி | செவ்வாய் | விசாகம் | தக்ஷிணாயன புண்யகாலம். காலை பெருமாள், தாயார் மூலவர், உத்ஸவர், தேசிகன் திருமஞ்ஜனம். மாலை பொழுதுடன் ஆராதனம். பெருமாள், தேசிகன் வீதிபுறப்பாடு | ஸ்ரீ S. ராமஸ்வாமி |
| 04.07.2024 ஸ்ரீ ஸுதர்சன ஹோமம் | | | | | | |
| உத்ஸவங்கள் மாறுதலுக்கு உட்பட்டவை | | | | | | |

## ஆனியில் முக்கிய உத்ஸவங்கள்

| | |
|---|---|
| **நாதமுனிகள் திருநக்ஷத்ரம்**<br>ஜூன் 20 (வியாழன்) | **ஸ்ரீ ஸுதர்சன ஜயந்தி, ஸ்ரீ ஸுதர்சன ஹோமம்**<br>ஜூலை 14 (ஞாயிறு) |
| **ச்ரவணம்**<br>ஜூன் 25 (செவ்வாய்) | **பெரியாழ்வார் திருநக்ஷத்ரம் (ஆனி கருடன்)**<br>ஜூலை 15 (திங்கள்) |
| **கோடை உத்ஸவம் (7 நாட்கள்)**<br>ஜூலை 7 (ஞாயிறு) முதல் 13 (சனி) வரை | **தக்ஷிணாயண புண்யகாலம்**<br>ஜூலை 16 (செவ்வாய்) |


## ஆஸ்திகர்கள் கவனத்திற்கு

பரமபத ப்ராப்தி அடைந்தவர்களுக்கு
12 நாட்கள் வரையிலான கைங்கர்யங்களைச் செய்யும் வகையில்,
ஆறு பகுதிகளுடன், நம் தேவஸ்தானத்தின் '**ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்**' இயங்கி வருகிறது.




**முகவரி மற்றும்**
**விவரங்களுக்கு:**

**'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்'**
9/5, வேங்கடேச அக்ரஹாரம் தெரு,
மயிலாப்பூர்,
சென்னை – 600004.
போன்: 044 – 4322 9401.

**நிர்வாகம்: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை – 600004.**

ஸ்ரீ:

# வேதமும் வேதாந்த தேசிகரும்

ஸ்ரீ உ.வே. அக்நிஹோத்ரம் ராமானுஜதாதாசார்யர் ஸ்வாமி

(ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானத்தின் 1975-ம் ஆண்டு ஸம்ப்ரோக்ஷண மலரில் வெளிவந்த வ்யாஸம்)

அபௌருஷேயமாகவும், அனாதியானதாகவும் எம்பெருமானுடைய திருவாக்கிலிருந்து அந்தந்த கல்பங்களில் வெளிவந்து பெருமை பெற்றதாகவும் உள்ள வேதம், வேதாந்த தேசிகருடைய க்ரந்தங்களில் எவ்விதம் நிறம் பெறுகின்றது என்பதை இங்கு விவரிப்போம்.

ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகர்களான நாதமுனி முதலான ஆசார்யர்கள் தங்களுடைய க்ரந்தங்களில் வேதத்தையே மூல ப்ரமாணமாகக் கொண்டு பேசுகிறார்கள். தத்வ, ஹித புருஷார்த்த விஷயங்களான ஒவ்வொரு கருத்துக்களுக்கும் வேத வாக்யங்களையே ப்ரமாணமாக எடுப்பது இவர்களுக்கு வேதத்திலுள்ள ஈடுபாட்டையும் வைதிக ஸம்ப்ரதாயத்திலுள்ள அளவுகடந்த பக்தியையும் தெரிவிக்கிறது. வேத ஸம்பந்தத்தோடு கருத்துக்களை அனுபவிப்பதில் தனி ருசியையும் காண்கிறார்கள்.

ஆசார்ய கோஷ்டியில் ஸ்ரீ வேதாந்த தேசிகன் தனிச் சிறப்போடு விளங்குகிறார். பூர்வாசார்யர்களின் கருத்துக்களெல்லாம் இவருடைய க்ரந்தங்களில்தான் உருவைப் பெறுகின்றன. இவருடைய க்ரந்தங்கள் பிறக்காவிடில் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தின் சரித்ரமே வேறு வழியில் சென்றிருக்கும் என்று கூறுவது மிகையாகாது. வேதாந்த தேசிகன் க்ரந்தங்களில் விசிஷ்டாத்வைதத்தின் முடிவான உருவைக் காண்கிறோம். ரகசிய க்ரந்தங்களில் ஸம்ப்ரதாய கருத்துக்களுக்கு மூல ப்ரமாணங்களை வெளியிட்டு அவைகளை யாரும் எந்தக் காலத்திலும் அசைக்க முடியாத நிலையில் ஸ்தாபித்துள்ளார்.

ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம், சில்லறை ரஹஸ்யங்கள் இவை அபூர்வமான பல கருத்துக்களுக்குக் கருவூலமாக அமைந்துள்ளன. தர்க்க பாண்டித்யத்தில் ஸ்வாமிக்கு நிகராக முன்னும் எந்த ஆசார்யரும் இருந்ததில்லை. பின்னும் எந்த ஆசார்யரும் அவதரித்ததில்லை. இனியும் அவதரிக்கப் போவதில்லை. ஸ்வாமியின் தர்க்க பாண்டித்யத்தின் ஆழத்தை அவருடைய நியாய பரிசுத்தி, தத்வ முக்தா கலாபம், ஸர்வார்த்த ஸித்தி, சத தூஷணி முதலான க்ரந்தங்களில் பார்க்கிறோம். தர்க்க பாண்டித்யத்தால் ஸ்வாமியினால் எதையும் ஸாதிக்க முடியும் என்பது பிரதிஜ்ஞா மாத்திரம் இல்லை. ஸ்வாமியின் க்ரந்தங்களே இதற்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றன.

அவ்விதமே பகவத் அனுபவம் என்பது ஆழம் காண முடியாததான கடல். ஸ்வாமி தேசிகன் பகவத் அனுபவத்தில் ஈடுபடுவதில் யாருக்கும் குறைந்தவரில்லை. தேசிக ப்ரபந்தத்தில் இதைப் பார்க்கிறோம். ஆனால் அவருடைய அனுபவம் பிரமாணங்களுக்குக் கட்டுப்பட்டிருப்பதால் தனிப் பெருமையைப் பெறுகின்றன. பகவத் அனுபவத்திலும் வழிதவறிச் செல்வதில்லை. மாதவன் பேர் சொல்வதே ஓத்தின் சுருக்கென்று ஆழ்வார் அருளிச் செய்தபடி வேதம் முழுவதுமே ச்ரிய: பதியான எம்பெருமான் பெருமை சொல்லுவதால் பலவித ரத்னங்கள் நிறைந்த சாகரம் போலுள்ள வேதம் ஆசார்யர்களுக்கு உதவியளிப்பதை மத்யஸ்தர்களும் கண்டு வியக்கிறார்கள்.

வேதம் காலத்திற்கு அப்பாற்பட்டது. அந்தந்த காலத்தில் தோன்றுபவர்கள் தாங்கள் வைதிகர்கள் என்ற உணர்ச்சியோடு விஷயங்களைக் கவனித்தால் எந்த வழியிலாவது வேதம் உதவாமலிருக்காது. பிராஹ்மணனாகப் பிறந்தவனுக்கு வேதம்தான் சாச்வதமான தனம். எல்லாவற்றையும் பார்க்க உதவும் அழகான கண். வேதம் ஒரு நந்தா விளக்கு. விளக்கின் உதவியைக் கொண்டு உலகத்தைக் காண்கிறோம். இந்த நிலையில் ஸ்வாமி தேசிகன் தன்னுடைய அனுபவத்தில் வேதம், வைதிக தர்மம் இவைகளுக்குத் தனி இடத்தை கொடுத்திருப்பதுடன் ஸ்வாமி தேசிகனின் அனுபவத்தின் தனிப் பெருமை வைதிக மார்க்கத்தை அடிப்படையாகக் கொண்டு அனுபவிப்பதே. அவற்றில் சிலவற்றை இங்கு குறிப்பிடுவோம்.

வைதிக மார்க்கத்தைப் பின்பற்றும் வைஷ்ணவர்களுக்கு அநுஷ்டானமும் ஆசாரங்களும் அவர்களுடைய சிந்தனையில் முன்னிற்கின்றன. பாண்டித்யத்தில் விசேஷ ஈடுபாடும், கௌரவ புத்தியுமுள்ள ஸ்வாமி அநுஷ்டாநத்தில் ப்ரதிபலிக்காத பாண்டித்யம் நாயின் வாலைப் போன்றது, ஒன்றுக்கும் உதவாது என்ற கருத்தை



வெளியிடுவது கவனத்துக்குறியது. ச்ரௌத, ஸ்மார்த்த கர்மாநுஷ்டானம் தான் பாண்டித்யத்தின் வெளித்தோற்றம். கைங்கர்ய நிஷ்டர்களாக உள்ள வைஷ்ணவர்களுக்கு ஆஜ்ஞா, அநுஜ்ஞா கைங்கர்யம் என்றவற்றில் நித்ய, நைமித்திக கர்மாநுஷ்டாநமும் அவச்யமாகிவிட்டது. கர்மா நுஷ்டானம் அவச்யமாக இருந்தாலும் இல்லாமல் போனாலும் ஆச்ரம தர்மம் என்ற முறையில் இதைப் பின்பற்றியாக வேண்டும் என்று ஸ்வாமி வற்புறுத்துகிறார்.

ஸ்ரீபாஷ்யகாரருடைய சிஷ்ய பரம்பரையில் வந்துள்ளவர்களும் ச்ரௌத, ஸ்மார்த்த கர்மாக்களை, ஸ்வஸூத்ரப்படி செய்து வந்ததையும் உதாஹரிக்கிறார். அநுஷ்டிக்க வேண்டிய கர்மாக்களில் ச்ரௌத கர்மா தலைசிறந்தாக இருப்பதால் ஸ்வாமி இங்கு அதிக ஆதாரத்தைக் காண்பிப்பதைப் பார்க்கிறோம். ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் ஆறாவது அங்கத்தில் தர்கனோடு பல க்ஷேத்ரங்களைச் சுற்றி அங்குள்ள குண தோஷங்களை விவேகன் தெரிந்து கொள்ளுகிறான். தொண்டை மண்டலத்தை தர்கன் முடிவாகத் தேர்ந்து எடுத்து அதன் பெருமையை விளக்கிவிட்டு இங்கு வஸித்துக் கொண்டு ஆதானத்தைப் பண்ணி யாகங்களைச் செய் என்று ஆலோசனை கூறுவது ச்ரௌத கர்மாக்களின் முக்யத்வத்தை ஸ்வாமி எப்படி உணர்த்தியிருக்கிறார் என்பதை வெளியிடுகிறது.

ஹயக்ரீவனுடைய பெருமையை அனுபவிக்கும் பொழுது ஹயக்ரீவன் ஹவ்யவாஹனன் என்ற திருநாராயணீயத்திலுள்ளதை அடிப்படையாகக் கொண்டு 'ச்ரௌதமான யாகங்களின் அக்நியில் மந்த்ரமயமான சரீரத்தை எடுத்துக் கொண்டு ஹவிஸ்ஸை வாங்கிக்கொண்டு போய் தேவர்களுக்குக் கொடுத்து அவர்களை ஹயக்ரீவன் வளர்க்கிறார்' என்று கூறுவதன் மூலம் ச்ரௌத கர்மாவில் வைஷ்ணவர்களுக்குள்ளதான கருத்தை விளக்குகிறார். காஞ்சீ வரதராஜனின் தனிப் பெருமை ப்ரஹ்மாவின் அச்வமேத யாகத்தில் உத்தரவேதியில் அவதாரம் செய்து ஹவிஸ்ஸான வபையை அநுபவித்துக் கொண்டே ஸேவை ஸாதி த்ததுதான். தசரதன் வபாகந்தத்தை நுகர்ந்தான். செய்த வினைகள் கழிந்தன. அவனுக்குப் பிள்ளையாக பகவானே பிறந்தான்.

உத்தர வேதி என்பது யாக சாலையில் ஆஹவனீயாக்நியை வைக்குமிடம். வரதராஜனை அநுபவிக்கும் காலத்தில் உத்தர வேதியும், உத்தர வேதியை அநுபவிக்கும் காலத்தில் ஸௌமிக வேதியும் ஹவிர் தானம், ஸதஸ், பிராக்வம்சம் போன்ற இடங்களும். அத்வர்யு, ஹோதா, ப்ரஹ்மா உத்காதா போன்ற பதினாறு ரித்விக்குகளின் ஸஞ்சாரமும் திருவுள்ளத்தில் தோன்றுகின்றது. இது வைதிக கர்மாவின் தனி அநுபவம். அடுத்ததாக ஸ்தோத்ரங்களில் உள்ள சில அனுபவங்களை கவனிப்போம். கண்ணனை கோபால விம்சதியில் அநுபவிக்கிறார். திருமுக மண்டலத்தை அநுபவிக்கும் பொழுது முகத்தில் வேத கந்தம் கமழுகிறது. அதைத் தனியாகக் குறிப்பிடுகிறார். **ஆம்நாய கந்திருதித ஸ்புரிதாத்ரோஷ்டம்...**

கண்ணன் இடை ஜாதியில் பிறந்ததால் முகத்தில் மொச்சை வாஸனை இருப்பதாக சிலர் அநுபவிக்க, அதை மறுக்கும் வகையில் வேத கந்தத்தை அநுபவிக்கிறார். திருவடியிலும் வேத கந்தத்தை அநுபவிப்பதை **வேலாதீத ச்ருதி பரிமளம்** என்று பகவத் த்யான ஸோபாநத்தில் பார்க்கிறோம்.

ஹயக்ரீவ ஸ்தோத்ரத்தில் ஹயக்ரீவனுடைய ஹேஷாஹல ஹலத்தில் ரிக் மந்த்ரங்கள், ஸாம மந்த்ரங்கள், யஜுர் மந்த்ரங்கள் இவைகளை அநுபவிக்கிறார். **ஸமாஹார: ஸாம்நாம் ப்ரதிபதம்ருசாம் தாம யஜுஷாம்...**

பெரிய திருவடி ஸாமஸ்வரூபம் என்று வேதமே கூறுகிறது. அந்த வேத வாக்யங்களை திருவுள்ளத்தில் கொண்டு கருட பஞ்சாசத்தில் சந்தஸ்ஸுகள் அங்கங்கள், கண்கள், திஷ்ணியங்கள் என்பது போல் அநுபவிக்கிறார். **வேதாத்மா விஹகேச்வர:** என்று பெரிய முதலியாரும் அருளிச் செய்கிறார். எம்பெருமான் வேத ப்ரதிபாத்யன் என்பதை கருடாழ்வான்மீது எம்பெருமான் எழுந்தருளுகிறான் என்று அநுபவிக்கிறார்.

தசாவதார ஸ்தோத்ரத்தில் மத்ஸ்யாவதாரத்தை அநுபவிக்கும் காலத்தில் முழுகிக் கிடக்கும் வேதங்களை அங்குமிங்கும் தேடிக்கொண்டு, ஸமுத்ர ஜலத்தில் செல்லும் கண்களை அநுபவிக்கிறார். **நிர்மக்ந ஸ்ருதி ஜாலமார்கணதசா தத்தக்ஷணை: வீக்ஷணை:...**

வரதராஜ பஞ்சாசத் அநுபவத்தைப் பார்க்கிறோம். மிகவும் அழகான அநாதியான வேதங்களுக்கு எம்பெருமான் செய்த உதவிகளை விவரித்து, 'வேதமாகிற மரத்தைக் காப்பாற்ற எதைத் தான் செய்யவில்லை எம்பெருமான்?' என்று ஆச்சர்யத்தோடு பேசுகிறார். ஆபத்தில் காப்பது, வேதம் ஜீவகளையுடன் இருக்கச் செய்வது, வேதத்தைத் தாங்குவது, தளிர் விடச் செய்வது, முதலியவைகளை வரதராஜன் செய்கிறார்.

வரதராஜ பஞ்சாத்தில் உள்ள அநுபவம் மிகவும் உருக்கமானது. 'வேதங்களை ஆபத்துக் காலங்களில் காப்பாற்றுகிறீர். அதன் இருப்பிடமாகவும் இருக்கிறீர், தாங்குகிறீர், முளையும் தளிர்களும் நீர் நிழலும் நீர், ரஸவத்தான பழங்களும் நீர், கிளைகளில் விளையாடும் தேவர்களாகிற பக்ஷிகளை உடைய வேத வ்ருக்ஷத்திற்கு நீர் எதுதான் ஆகவில்லை?' என்று கூறுகிறார். **கிம்நாம நாஸி மஹதாம் நிகமத்ருமாணாம்.**

தேவநாயகனுடைய திருமூக்குகளை அநுபவிக்கும் போது எம்பெருமானின் மூச்சுக் காற்றிலிருந்து வேதம் வந்ததை அநுபவிக்கிறார். **நித்யோதிதை: நிகமநிச்வஸிதைஸ்தவைஷா...** திருமூக்கின் பெருமையைக் கண்டு மோஹிக்கிறார். **ஸம்ப்ரதி முஹ்யாதோ மே.**

ஸுதர்சனாஷ்டகத்தில் சதபதம் என்ற சுக்ல யஜுர் பிராஹ்மணத்தால் திருவாழியாழ்வான் துதிக்கப்படுவதைச் **சதபத ப்ரஹ்மநந்தித** என்று

கொண்டாடுகிறார். சதபதத்தின் கிலத்தில் தான் சக்ரத்தாழ்வானை பொறியாலிட்டு தரிப்பது மோக்ஷ ஸாதனமாகச் சொல்லப்படுகிறது.

அச்யுத சதகத்தில் **அகுமார யௌவன** என்று ஒரு அநுபவம் காணப்படுகிறது. இது எம்பெருமானின் யௌவனம் அழியாதிருப்பதைத் தெரிவிக்கிறது. இது 'யுவா குமார' என்ற ரிக்வேத அநுபவத்தை பின்பற்றியது. பிறர் இந்த மந்த்ரத்தின் ரஹஸ்யத்தை அறியாமல் இதே மந்த்ரத்தை உதாஹரித்து நித்ய குமாரன் என்ற விளக்கம் கூறினார்கள். அகுமார என்று தான் வேத பாடம். குமார என்ற பதம் குத்ஸிதார்த்தத்தை தெரிவிப்பது. இதை எம்பெருமான் விஷயத்தில் செலுத்துவது ந்யாயமில்லை. வேதபத பாடத்தை அநுஸரித்து அகுமார: என்று தான் இருக்க வேண்டும் என்பதைத் திருவுள்ளத்தில் கொண்டு ச்லோகத்தின் ஆதியிலேயே ஸம்சயமில்லாமல் இருக்க அகுமார என்று ப்ரயோகம் செய்கிறார்.

ஸ்ரீபாஷ்யகாரருடைய பெருமையை ஸ்வாமி தேசிகன் உணர்ந்தது மாதிரி யாரும் உணர்ந்திருக்க முடியாது. மூலப்ரமாணமான ச்ருதியை கைவிடாமல் உடையவர் பேசுகிறார் எல்லா வேதங்களும் எம்பெருமானைத் தான் ப்ரதிபாதனம் பண்ணுகின்றன. ச்ருதிகளில் ஸ்தூல த்ருஷ்டியில் காணப்படும் விரோதத்தை ஸமாதானப் படுத்துவது முதல் உள்ள ஸ்ரீபாஷ்யகாரர் செய்துள்ள அநேக உபகாரங்களை மனதில் கொண்டு, பலகாலமாக தலை வாரப்படாமல் கோது நிறைந்த தலை மயிர்களை உடைய வேதமாகிற பெண்ணின் தலை மயிர்களில் உள்ள கோதுக்களை விலக்கிச் சிடுக்கு எடுத்து தலைவாரிப் பின்னும் அலங்காரம் செய்யும் பெண்களாக பாஷ்யகாரர் ஸூக்திகளை வர்ணிப்பது அழகானது. **சிரந்தந ஸரஸ்வதீ சிகுரபந்த ஸைரந்த்ரிகா:.**

அவரவர்களின் புத்தியில் தோன்றும் கருத்துக்களுக்கு வேதப்ரமாணம் கிடைப்பதைக் கண்டு ஆசார்யர்கள் மகிழ்கிறார்கள். ஸ்ரீ பாஷ்யகாரர் ச்ருதி ப்ரமாணத்தில் நின்று பல வாக்யங்களை ஸர்வ ஸம்மதமான ச்ருதியிலிருந்து எடுப்பது ப்ராமாணிகர்களின் சித்தத்தை மிகவும் ஆகர்ஷிக்கக் கூடியது.

ஸ்ரீபாஷ்யகாரர் வேதங்களுக்கு, கருத்துக்களை சொல்ல ஆரம்பித்தவுடன் வேதம் பொங்கி எழுந்து களிக்கிறது. **நிகமஜலதி வேலா பூர்ணசந்த்ரோ யதீந்த்ர:.**

பாதுகா ஸஹஸ்ரத்தில் நாத பத்ததி ஸ்வாமி தேசிகனின் வேதம், வைதிக யாகங்களில் ஈடுபாட்டை தெரிவிப்பதில் சிகரமாக அமைந்துள்ளது. அதிலிருந்து சில:

பாதுகையின் பூஷணங்களின் சப்தங்களும் வேத சப்தங்களும் பிணங்கிப் பேசுகின்றன. வேதங்கள் செய்யும் அபிவாதநத்திற்குப் பாதுகை தன்னுடைய ஒலிகளால் ப்ரத்யபிவாதநம் செய்கின்றன. பரம புருஷார்த்தத்தை அடைந்த பாதுகைகள் வைகுண்டத் தில் முக்தர்கள் அஹமந்நாத என்று கானம் பண்ணுவது போல் கானம் பண்ணுகின்றன.

பிறருக்குத் தெரியாமல் சொல்லப்படும் அரிஷ்ட சாந்தி மந்த்ரத்தைச் சொல்வது போல ஒலிக்கின்றன. வேதங்கள் மறைமுகமாகத் தெரிவித்த பரமபுருஷனை பாதுகை தன் மீது நிறுத்தி ஒலி மூலம் அவன் தான் இவன் என்று காட்டுகிறது. 'ப்ரணவத்தின் ஒலி போல பாதுகையின் நாதமிருந்து வருகிறது. வேதங்கள் எம்பெருமானைத் துதிக்க ஆரம்பித்து குணங்களில் ஆழங்கால்பட்டு மோஹித்துப் போகும் காலத்தில் ஸ்வரம் எழுத்து இவைகளில் மாறுதல்களும் தவறுதல்களும் வருகின்றன. பாதுகையின் நாதம் அதை திருத்தி சிக்ஷிக்கின்றன. ஸோம யாகத்தில் ஸவனஹவிஸ் முக்யமான யாகம். சமஸங்களோடு சம ஸாத்வர்யுக்களும் சுக்ராமந்திக்ரஹத்தோடு அத்வர்யுவும் ப்ரதிப்ரஸ் தோதாவும் நின்று ப்ரைஷம் பண்ணுவார்கள். இது ஒரு அழகான காக்ஷி.

ப்ரைஷத்திற்கு பதிலளிப்பது போல் பாதுகையின் நாதங்கள் அமைந்துள்ளன. ஸவந ஹவிஸ்ஸுகளுக்கு எம்பெருமான் தான் தேவதை. அதனால் பாதுகையின் நாதங்கள் பதிலளிப்பது உசிதமே. யாகங்களில் ப்ரஹ்மா என்ற ரித்விக் ஒவ்வொரு கர்மாவிலும் அநுஜ்ஞாக்ஷரமான ப்ரணவம் மூலம் தன்னுடைய அநுமதியைத் தெரிவிக்கிறான். பாதுகையின் ஒலி ப்ரஹ்மாவின் அநுஜ்ஞாக்ஷரமாக அமைந்திருக்கிறது. கர்மாவைச் செய்யும் காலத்தில் திதி, வார, நக்ஷத்ரங்களில் குறை இருந்தாலும் அதை ஸமாதானம் பண்ண இருபத்து எட்டாவது நக்ஷத்ரமான ப்ராஹ்மணனை ஆராதித்து 'புண்யாஹம்' (நல்ல நாள்) என்று சொல்லச் செய்ய வேண்டும்.

பாதுகையின் கோஷம் புண்யாஹ கோஷமாக அமைந்திருக்கின்றது. சத்ரு ஸைந்யத்தை விரட்ட பல ஸூக்தங்கள் வேதங்களால் படிக்கப்படுகின்றன. பாதுகையின் நாதம் அவைகளாக அமைந்துள்ளன. பலவிதமணிகள் ஒன்றின் பின் ஒன்றாகவும் சேர்ந்தும் ஒலிப்பது உத்காதாபரஸ்தோதா ப்ரதி ஹர்தா. இது ஸாம கானம் போல் அமைந்துள்ளது.

அதர்வ வேதத்தில் பெண்களை மோஹிக்க வைக்கப் பல மந்த்ரங்கள் உள்ளன. பாதுகையிலிருந்து வரும் நாதம் பெண்களை மோஹிக்க வைக்கும் மந்த்ரங்களாக அமைந்துள்ளன. ஸவநீய ஸ்தோத்ரங்கள் எம்பெருமானின் குணங்களை விளக்கித் துதிக்கின்றன. இதுபோல அமைந்துள்ள ஒலியுள்ள பாதுகைகளின் மீது ஏறி, ஹவிஸ்ஸைப் பெற்றுக் கொள்ள எம்பெருமான் எழுந்தருளுகிறார்.

ஸ்வாமி தேசிகனுக்கு வேதங்களிலும் வைதிக கர்மாக்களிலும் உள்ள ஈடுபாட்டை அளவிட்டுச் சொல்ல முடியாது. தன்னுடைய ஈடுபாட்டை, க்ரந்தங்களில் பலவிதமாகத் தெரிவித்து வைதிக மதத்திற்கு ஸ்வாமி தேசிகன் செய்துள்ள உபகாரத்தை வைதிகர்கள் மறக்க முடியாது.

ஸ்ரீ:

# Important Tenets Of Our Sampradaya (15)

## Sriman Narayana Is The Ultimate Reality

Sri U. Ve. Natteri P. Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore

In a succinct and splendid chapter ‘Paradevatha Paaramaarthyam’ in Srimath Rahasya-thraya Saaram, Swami Desika asserts the supremacy of Sriman Narayana in no uncertain terms. This Note houses the enumeration of some of the vital, irrefutable points put forth by the illustrious Acharya, drawing from legends.

- The ultimate goal of any religion worth its name is attainment of Moksha. The authority for the same must be determined in the first place, lest it is impossible to achieve the objective. Swami Desika does that with elan, and emphatically proves that Sriman Narayana is the sole authority in granting Moksha.
- He is the creator of everything and hence the ‘First-Cause Lord’. He is the essence of the Vedas encapsulated in the Pranava.
- The other constituents of the so called ‘triumvirate’ — Brahma and Rudhra — were created and assigned roles by Sriman Narayana and they owe their positions to Him. They are subservient to Lord Vishnu.



- They are not empowered — none else is, for that matter — to bestow Moksha. They have the authority to grant trifling benediction, but that also out of what they received from Sriman Narayana.
- They are, like any other Jivaathma, bound by their Karmas, and their knowledge is not absolute.
- Similarly, Brahma and Rudhra are the body of the omni-present Lord Vishnu.
- Sriman Narayana is God nonpareil. Neither has He anyone equal not superior.
- When a Jivathma is fortunate to receive Sriman Narayana’s Kataksham at the time of birth, he becomes one with an innate desire for Moksha. On the other hand, the glance of Brahma results in ‘Raajasa’ quality and that of Siva vests ‘Thaamasa’ quality in Jivathmas.
- Sriman Narayana’s supremacy is evident in the ‘Pranava’ and ‘Narayana’ in the Moola Manthram; in ‘Narayana’ in both the places in the Dhvayam; ‘Maam’ and ‘Aham’ in the Charama-Slokam.
- When someone is unsure of the ‘Supreme Lord’, ‘Maha Viswaasam’ is absent and the question of attaining Moksha is ruled out for him.

*(to be continued…)*





# ப்ரஹ்மோத்ஸவம்











ப்ரஹ்மோத்ஸவம்















## ப்ரஹ்மோத்ஸவம்













## ப்ரஹ்மோத்ஸவம்









ப்ரஹ்மோத்ஸவம்











# ப்ரஹ்மோத்ஸவம்













## ப்ரஹ்மோத்ஸவம்












ப்ரஹ்மோத்ஸவம்





## ப்ரஹ்மோத்ஸவம்













## ப்ரஹ்மோத்ஸவம்









ஸ்ரீ:

## கண்ணுக்கினியன



ப்ரஹ்மோத்ஸவம்





விடாயாற்றி உத்ஸவம்



நம்மாழ்வார் திருநக்ஷத்ரம்









## வஸந்தோத்ஸவம்







ஸ்ரீ:

# விட்டுசித்தர் இடும் மந்திர மாமலர்

ஸ்ரீ உ.வே. காவனூர் ஸுதர்சநாசார்யர் ஸ்வாமி, மேற்கு மாம்பலம்

வேதவேத்யனான ஸ்ரீமந்நாராயணனின் கைங்கர்யத்தையே இஹ, பர லோகங்களில் வேண்டுபவர்கள் ஸ்ரீ வைஷ்ணவர்கள். **விஷ்ணு பக்த: வைஷ்ணவ:** என்று அறிதலால் விஷ்ணுவிடம் பக்தி கொண்டோர்கள் வைஷ்ணவர்கள் என பொருள் விளங்கும். இங்கு ஸம்சயமெழுகிறது. ஸ்ரீமந் நாராயணனைத் தொழுமனைவரும் வைஷ்ணவர்களாகில் அவிச்சின்மான, ஆழ்வார்கள் மற்றும் உடையவர், ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் போன்ற ஆசார்யர்களால் காட்டப்பட்ட ஸத்ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்தவர்கள் யார்? பதில் ஸ்ரீ வைஷ்ணவர்கள். இதில் ஸ்ரீ என்பது மறை(களின்)ப் பொருளை உணர்த்தும் செந்தமிழ் மறைகளான அருளிச் செயல்களையே குறிக்கும். இந்த ஸ்ரீயானது கம்பீரமானது, இனிமையானது, ஸ்பஷ்டமானது, ஹிதமானது, ஸத்யமானது; அனைத்துக்கும் மேலாக ஸ்ரீஹரியை ஈர்க்க, மெய்மறக்க வைக்க வல்லது.

இப்படியான தமிழ் வேதங்களில் முதன்முதலாக ஓதப்படுபவை பல்லாண்டு முதலான திருமொழிப் பாசுரங்கள். பீதகவாடைப் பிரானை ஆசார்யனாகவும் ஜாமாதாகவும் கொண்ட ஸ்ரீ விஷ்ணுசித்தரால் அருளிச் செய்யப்பட்டவை. இவர் தமிழ் செய்த சில வேத வாக்யங்களை அனுபவிப்போம்!

ஆழ்வார் பாண்டிய மன்னன் ஸபையிலே பரதத்வ ஸ்தாபனம் செய்ய, களிப்புற்ற மால் கருட வாஹனனாய்த் தோன்ற, ஸ்தோத்ர ப்ரவாஹமான பல்லாண்டு தோன்றியது.

**(1) பல்லாண்டு பல்லாண்டு - அக்நிராயுஷ்மான் ஸ வனஸ்பதிபி:... கரோமி** (தை.ஸம். 2.3.10.3)

அக்னி, ஸோமன், யஜ்ஞம், ப்ரஹ்மா, ப்ராஹ்மணர்கள், தேவதைகள், பித்ருக்கள் என அனைவரும் மிகுந்த ஆயுளுடன் உள்ளனர். அவர்களின் ஆயுள் பகவத் கைங்கர்யம் செய்வதற்காகவே. தங்களுக்கென தனித்தாக ஒன்று இல்லாமல், அளிக்கப்பட்ட அனைத்தையும் பகவானிடம் கொண்டு சேர்க்கும் வாஹனர்களாக. பல்லாண்டு பாடுவதால் இவர்களின் கைங்கர்யங்களின் நிர்விக்னத்தை வேண்டுகிறார் புதுவைக்கோன். இப்படியாக ஸமஸ்த தேவதைகளின் நிலைகளை நிர்வாஹம் செய்யும் திருவடிகளுக்கு காப்பிட்டுகந்தபடி.

(2) **அடியோமோடும் - ஆயுராசாஸ்தே**
(தை. ப்ர. 3.5.10.4 )

பிரிவுக்கு இடத்தைக் கொடுக்க விருப்பமற்ற வில்லிபுத்தூரர், தனக்கும் வேதாந்த விழுப் பொருளுக்கும் உள்ள உறவுக்கு ஆயுள் பலவெனக் கூறி அவ்வுறவை வாழ்த்துகிறார். இவ்விடத்தில் ப்ரதி நாளும் ரிக், யஜுஸ், ஸாமவேத நாண்மலர் கொண்டு பாதம் நண்ணும் கைங்கர்யத்தால், மார்வினில் வாழ்கின்ற மங்கையும் த்ருப்தியடைகிறாள், திவ்யாயுதாழ்வார்களும் அனுபவிக்கின்றனர் என்ற ருத்தி விசேஷங்களைக் கண்டு இன்புறுக.

**(3) வாழாட்பட்டு - அப்ரிரஸி நாரிரஸி**
(தை. ஸம். 1.3.1.1)

அஸ்வார்தினரான ஆழ்வார், தனித்துச்செய்யும் கைங்கர்யத்தை அபேக்ஷிக்கவில்லை என்பது இப்பாட்டில் அதிஸ்பஷ்டம். பகவத் கைங்கர்யமானது குழாங்களால் செய்யப்படுவது. அதிலும் தகுதியானோர் மட்டும் செய்ய வேண்டுமென்ற கட்டுப்பாடு. உள்ளீரேல் என்று ஆழ்வாரழைக்க பலர் ஒடி வந்தனர். அவர்களுள் தேஹ யாத்ரையை மட்டுமே உத்தேசித்து நீசப் பிழைப்பில் உள்ளோரை, அப்ரி என்ற சக்தியால்



(பாகுபடுத்தும் திறன்) விலக்கி, தகுதியுள்ளோரை மட்டும் அப்யர்ஹிதம் பூர்வம் என்று அனுபவிக்க அழைத்தபடி.

**(4) ஏடு நிலத்தில் இடுவதன் - ஒந்தத்ஸர்வம்**
(தை. ஆர. 6. 44)

தங்களுக்கென ஒரு எல்லையை வைத்துக்கொண்டு, கைவல்யகாம்யர்கள், ஓமிதி ஏகாக்ஷரம் ப்ரஹ்ம வ்யாஹரன் மாம் அனுஸ்மரன் ப்ரணவத்தை மட்டுமே உச்சரித்த வண்ணமுள்ளனர். அடிச்சேர்வதெளிது எனக் காட்டும் ஆழ்வார் ஸர்வலோகக்ருத் ஆன பரமபதநாதனே ப்ரவணத்தின் பொருளெனவும், திருவெட்டெழுத்தைக் கற்றுத் தேரலாமென எளிமையான வழியைப் போற்றுகிறார்.

**(5) அண்டக்குலத்துக்கு - ஸர்வேப்யோ ஹி காமேப்ய:**
(தை. ஸம் 2.4.31)

காம்யர்களை நோக்கிப் பாசுரமிடுகிறார். பொதுவாக இவர்களை இரண்டாகப் பிரிக்கலாம். ப்ரஷ்ட ஐச்வர்ய காமர்கள்: ஆபூர்வ ஐச்வர்ய காமர்கள். இழந்த செல்வத்தைத் திரும்பி அடைவதில் ஆசையுள்ளோர், அதிபதித்வம், வாரிதித்வம் போன்றவற்றில் ஆசையுள்ளோரை அழைத்து ஆயிரக்கணக்கான நாமங்களில் புத்தியை செலுத்தி மற்ற விஷயங்களில் காமத்தை விலக்கும்படி நல்வழியைக் காட்டுகிறார்.

**(6) எந்தை தந்தை தந்தை - ச்ரோணா நக்ஷத்ரம் விஷ்ணுர் தேவதா** (தை. ஸம். 4.4.10.2) ரக்ஷோஹணோ வலகஹன: (தை. ஸம். 1.3.2.1)

குலப்பெருமையைக் கூறுமாழ்வார், அநந்யப்ரயோஜனமான ஸ்ரீ ந்ருஸிம்ஹனின் கைங்கர்யமே ஸத்குலவடையாளம் என்று உறுதியிடுகிறார். அப்படியாக ஸ்ரீ விஷ்ணுவின் தொண்டிலுள்ளோர் வலகமென்று வேதத்தில் கூறப்படும் தீய சக்தியை வென்றவர்கள். அவ்வெற்றியினால் பத்ரம் (மங்களம்) பெருகிவிடும். எவ்விடத்தில் மங்களங்கள் உள்ளனவோ, அவ்விடத்தில் திருமகளார் பிரியா திருமால் நிரந்தர வாஸம் செய்கிறான். இதுவே எங்கள் குலத்தொழில்.

**(7) தீயிற் பொலிகின்ற... - சரணம் பவித்ரம் விததம் புராணம்** (தை. கா. 3.3.4)

பகவதாராதனாதி கைங்கர்யர்களுக்கு அர்ஹதை / யோக்யதையைப் பற்றி விளக்குகிறார். பாஸ்கர கோடி துல்யரான ஸ்ரீ ஸுதர்சனாழ்வானை வலக்கையில் ஏந்திய ஸ்ரீமந்நாராயணனின் பக்தர்கள், ஸதாசார்யனையடைந்து, அடிமைத்தொழில் பூண்டு,



அவரால் புஜங்களில் திருவடையாளங்களை அனுக்ரஹிக்கப்பெற்று, த்வாதச ஊர்த்வ புண்ட்ரங்களை அனுதினமும் அணிந்து, அன்னம் சீடை கறி படைத்து பாதம் பணியக்கடவர்.

**(8) நெய்யிடை நல்லதோர் சோறும் - ஸுவர்காய வை லோகாய** (தை. ஸம் / தை. ப்ரா. அனேக இடங்களில்)

பாரிலுள்ளோர் பயன்படுத்தும் பொருட்களை தாரகம், போஷகம், போக்யம் என மூவகையாகப் பிரிக்கலாம். அன்னம் தாரகம். பால், தயிர் இத்யாதிகள் போஷகம். கந்தம், புஷ்பம் இத்யாதிகள் போக்யம். ஸ்வரூப அடையாளங்கள், ஜ்ஞானத்துடன் இவைகளை மட்டும் அனுக்ரஹிக்காமல் உஜ்ஜீவனத்தையும் அளிக்கும் நாகத்தின் மேல் பள்ளிகொண்ட பெருமானின் க்ருபையை நினைத்துப் பூரித்தபடி. வெள்ளுயிர் என்றபடியால் ஸத்வமான குணத்தை ஏற்றித் தமிழிட்டபடி. (ஸத்வ குணம் - வெண்மை, ரஜோ குணம் - சிவப்பு, தமோ குணம் - கறுப்பு).

**(9) உடுத்துக் களைந்த நின் - யோபாம் புஷ்பம் வேத**
(தை. ஆர. 1.22.1)

மஹாயஜ்ஞமான பகவத் கைங்கர்யத்தை முறைவழுவாது அனுஷ்டிக்கும் ச்ரேஷ்டர்கள், கைங்கர்ய பலனாகத் தங்களுக்குக் கிட்டும் வஸ்த்ர, புஷ்பாதி ப்ரஸாதங்களை உகந்து அணிகின்றனர்.

இப்படியான கைங்கர்யத்தால் அக்னி, வாயு, சந்த்ரன், நக்ஷத்ரங்கள், மழை, ஸம்வத்ஸரம் போன்ற தேவதைகள் மகிழ்வுற்று ஆனந்தம் அடைந்து அனுக்ரஹம் செய்கின்றனர்.

**(10) எந்நாள் எம்பெருமான் - யத்கிஞ்சேதம் வருண தைவ்யே** (தை. ஸம். 3.4.11.6)

முன்னால் ஜீவனை மட்டும் உபாஸிப்பது என்றிருந்த கைவல்ய ப்ரியர்களை ஆழ்வார் திருத்தியதை அனுபவித்தோம். ஆழ்வார் உபதேசித்ததை சிரஸாவஹித்தோர் பெற்ற பேறே பாசுரமாற்றாப் போலும். அடிமைத்தொழில் பூண்டவுடனேயே அரும்பிணி பாவங்கள் அகன்றன. அஜ்ஞானத்தால் செய்தவற்றைக் கொள்ள வேண்டாம் (ஏனஸோ தேவ ரீரிஷ:) யாத்ருச்சிகமாக ஜ்ஞானம் பிறந்து, பரம்பரையாகத் தொடர வேண்டும்.

**(11) அல்வழக்கு - ஏக ஏவ ருத்ரோ ந த்விதீயாய** (தை. ஸம். 1.8.6.1)

அல்வழக்கு – அநியாயங்கள் - ப்ரமாணமற்றவை. தேஹத்தை நிரந்தரம் எனவெண்ணுதல், தேஹமே ஆத்மா என்று உளறுதல், ஆளும் பரமனுக்குச் சமமாக க்ஷுத்ர தேவதைகளை ஒப்பிடுதல், அவைதிக சூன்ய - துர் மதங்களில் ப்ரவேசித்தல் இத்யாதிகள் சில அல்வழக்குகள். இப்படியான தோஷங்கள் இல்லாத செல்வ நம்பீ உமக்கு தாஸராவார். அவ்வாறே தாஸத்வத்தை இரண்டாவது என்பது இல்லை (ந த்விதீயாய தஸ்தே) நீ யே பரம் (ஏக ஏவ ருத்ர:) என்று நன்கறிவோம்

**(12) பல்லாண்டென்று பவித்திரனை - ஏதத் ஸாம காயந்நாஸ்தே** (தை. ஆர 5.5.10) / சாச்வதம் சிவம் (தை. ஆர. 6.11.1)

தோஷங்கள் கதஞ்சிதளவும் இல்லாதவன் பவித்ரனான திருமார்பன். அவன் ஆனந்தமாய் நித்ய ஸூரிகள், முக்தர்கள் செய்யும் கைங்கர்யங்களை சுத்தஸத்வமான ஸ்ரீ வைகுண்டத்தில் அனுபவித்து வருகிறான். ஸ்ரீ விஷ்ணுவை சித்தத்திலே உடையவரான அந்தணர் குல விளக்கான பெரியாழ்வாரின் இந்த பாசுரங்களை அனுஸந்திப்போர் சாச்வதமான மோக்ஷத்தில் நித்ய நிரந்தர கைங்கர்யமான உபய வேத கைங்கர்யம் பெற்று ஸூகப்படுவர்.

**முடிவுரை**

அருளிச்செயல்களின் அர்த்தங்களை இவ்வளவுதான் என சில பக்கங்களில் சுருக்க முடியாது. இந்த வ்யாஸத்தில் க்ருஷ்ண யஜுர் வேதத்தில் ஓதப்படும் சில மந்த்ரங்கள் மட்டுமே எடுத்துக்கொள்ளப்பட்டன. ஆகவே, இது ஒரு முழுமையான கட்டுரை அல்ல. கீழ்வரும் விஷயங்களை மனதில் நிறுத்த முயற்சி செய்வோம்.

1) வேதம், த்ராவிட வேதம் இரண்டும் ஸமம்

2) வேதங்கள் மங்களமானவை. அருளிச்செயல்களும் கூட மங்களமானவை தான்.

3) பக்திமான்கள் பகவான் விஷயத்தில் தங்கள் பக்தியின் மிகுதியினால் மனமுகந்து அவனுக்கு ஆசி கூறுவது மிகுந்த பக்தியின் அடையாளம் என்ற ஸூக்ஷ்மார்த்தத்தை பல்லாண்டு பாடிய பெரியாழ்வார் நமக்கு போதிக்கிறார்.

4) அருளிச்செயல்களில் அபிமானம் இல்லாதவர்கள் / தாழ்வாக நினைப்போர் ஸ்ரீ வைஷ்ணவரல்லர். அப்படிப்பட்டோரிடம் பழகக்கூடாது.

5) அருளிச்செயல்களும் அத்யயன பரம்பரையைச் சேர்ந்தவையே.

6) அவை அகங்களில், தேவாலயங்களில் அவச்யம் வேத ஸாம்யமாக அனுதினமும் யதா சக்தி ஓதப்பட வேண்டியவை.


## ஆஸ்திகர்களுக்கு ஓர் அறிவிப்பு

பித்ரு காரியங்கள் செய்வதற்கு,
சென்னை மயிலை ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானத்திற்குச்
சொந்தமான (G.K. மண்டபம் அருகில்) அறைகள் வாடகைக்கு விடப்படும்.

விவரங்களுக்கு தேவஸ்தான
அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,**
4/11, கேசவ பெருமாள் கோயில் சன்னதி தெரு,
மயிலாப்பூர், சென்னை 600 004. தொலைபேசி: 044-2495 3799.

# ஸ்ரீ ஹயக்ரீவனுக்கும் ஸ்ரீமந் நாதமுனிகளுக்கும் ச்லேடை

ஸ்ரீ சோகத்தூர் ஸ்ரீவத்ஸன், நங்கநல்லூர்

ஆழ்வார்கள் காலத்திற்குப் பிறகு நீண்ட நெடுங்காலமாக தர்சன நிர்வாஹகர்களான ஆசார்யர்கள் ஒருவரும் இல்லாமல் போயினர். அதனால் அஜ்ஞானம் என்னும் பேரிருள் இவ்வுலகத்தை சூழ்ந்திருந்தது. இவ்வுலகில் ஜீவர்கள் படும் அவஸ்தையைக் கண்டு பொறுக்கவொண்ணாத அருள்மாக்கடலான ஸ்ரீமந்நாராயணன் இவ்விருளை நீக்கி ஞான ஒளியை வளர்க்கத் திருவுள்ளம் பற்றினான். தனக்கு மிகவும் உகப்பான சொட்டைக்குலத்தில் ஓர் 'நாதனை' அவதரிக்கச்செய்து அவர் உபதேசங்களாலும் அநுஷ்டானங்களாலும் ஜகத்தை வாழ்வித்து அருளினான்.

யார் அந்த நாதன்?

*நாதேந முநிநாதேந பவேயம் நாதவாநஹம்|*
*யஸ்ய நைகமிகம் தத்த்வம் ஹஸ்தாமலகதாம் கதம்||*
(ஸ்ரீ யதிராஜ ஸப்ததி - 5)

'வேதத்தில் மறைந்து கிடந்த ஸகல ரஹஸ்யார்த்தங்களும் எம்பெருமான் மற்றும் ஆழ்வார் அநுக்ரஹத்தால் எவருக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல தெளிவாய் விளங்கிற்றோ அவரையே தலைவராகக் கொண்டவனாக நான் ஆகிறேன்' என்று ஸ்வாமி தேசிகன் இங்கே ஒரு நாதனைக் கொண்டாடுகிறார். அவர் ஸ்ரீமந் நாதமுனிகள்.

ஜ்ஞானமும், வைராக்யமும், கண்ணனிடத்தில் கடலைப் போல கரைகாண முடியாத பக்தியும் கொண்ட ஸ்ரீமந் நாதமுனிகள், ஆழ்வார் காட்டியபடி சரணாகதியை மோக்ஷத்திற்க்காக அநுஷ்டித்தவர். ஆயினும் எம்பெருமான் அநுபவத்தில் இருக்கும் த்வரையினால் ஸ்வயம் ப்ரயோஜனமாக பக்தியோகத்தை அநுஷ்டித்து அவனை ஸாக்ஷாத்காரம் பண்ணி ஸேவித்து வந்தவர். அதனாலேயே சடகோபமுனிக்குப் பிறகு நம் ஸம்ப்ரதாயத்தில் 'முநி' (நாதேந முநி) என்ற ஏற்றத்தையும் பெற்றவர் இவரே.

ஸ்வாமி தேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்ய- த்ரய ஸாரத்தில் **ஜாதி-குண-வ்ருத்தாதி களாலே உத்க்ருஷ்டரானபராசர- வ்யாஸ-சுக- சௌநக-நாதமுனி ப்ரப்ருதிகளுக்கும்...** என்று நாதமுனிகளை மஹர்ஷிகளின் கோஷ்டியில் சேர்த்து இவர் பெருமையைக் காட்டுவது இங்கே அநுஸந்திக்கத்தக்கது.



ஸ்வாமி ஆளவந்தார் அருளிய ஸ்தோத்ர ரத்னத்தில்:
*தஸ்மை நமோ மதுஜிதங்க்ரி ஸரோஜதத்த்வ -*
*ஜ்ஞாநாநுராக மஹிமாதிசயாந்தஸீம்நே*
*நாதாய நாதமுநயேऽத்ர பரத்ர சாபி*
*நித்யம் யதீய சரணௌ சரணம் மதீயம்*
(ஸ்தோத்ர ரத்னம் - 2)

என்றருளி ஸ்ரீமந் நாதமுனிகளை நமஸ்கரிக்கிறார். இந்த ஸ்லோகத்தில் எம்பெருமான் ஸ்ரீ ஹயக்ரீவனுக்கும் ஸ்ரீமந் நாதமுனிகளுக்கும் ச்லேடைப் பொருள் கொள்ள வேண்டும். அது எப்படி என்று தெரிந்து கொள்வதற்கு முன் மஹாபாரதம் சாந்தி பர்வத்தில் பீஷ்மர் அருளும் இந்த ச்லோகத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும்:

*ஜாயயமாநம் ஹி புருஷம் யம் பச்யேத் மதுஸூதந:|*
*ஸாத்விக: ஸ து விஜ்ஞேய: ஸ வை மோக்ஷார்த்த சிந்தக:||*

தாயின் கர்பத்திலிருந்து ஒரு ஜீவன் புவியில் பிறக்கும்பொழுது மதுஸூதனனான ஸ்ரீ ஹயக்ரீவனின் திவ்யகடாக்ஷம் அந்த ஜீவனுக்கு ஏற்படுமாயின் அவன் அதே பிறவியில் ஓர் ஆசார்ய ஸம்பந்தம் பெற்று உபாய பூர்த்தி ஏற்பட்டு அவனுக்கு

மோக்ஷம் ஸித்திக்கும். இவனை ப்ரஹ்மனோ, ருத்ரனோ காணில் ரஜோ குணத்தாலும் தமோ குணத்தாலும் எது பரம ப்ரயோஜனம் என்பதில் கலக்கம் ஏற்பட்டு மோக்ஷம் ஸித்திக்காமல் போகும்.

இதன்படி ஸ்ரீ ஹயக்ரீவனின் பரிபூர்ண கடாக்ஷத்தைப் பெற்றவர் ஸ்ரீமந் நாதமுனிகள் என்கிறார் ஆளவந்தார்.

எம்பெருமான் ஸ்ரீ ஹயக்ரீவன் மது-கைடபர்கள் என்ற அசுரர்களைக் கொன்று, ஹிரண்யகர்ப்பாதிகளான ஸாது க்களை ரக்ஷித்து, ரஜஸ்-தமஸ் குணங்களால் ப்ரஹ்மனுக்கு தீங்கு நேராமல் பாதுகாத்து, அவனுக்கு வேதோபதேசம் முதலானவற்றை அருளி தர்ம ப்ரவர்த்தனம் செய்தார். அதேபோல் நாதமுனிகள் அஸார-அல்பஸாராதி சாஸ்த்ரங்களை தம் க்ரந்தங்கள் மூலமாக நிரஸனம் செய்து வைதிக மதத்தை ரக்ஷித்து, எம்பெருமானின் பெருமைகளை உலகில் உள்ளோருக்குக் காட்டி தமது அநுஷ்டானத்தினால் எல்லோரையும் வழிப்படுத்தி வானேற்றினார்.

மேலும் மது-கைடபர்கள் வேதங்களை அபகரித்தது போல அஸுர ப்ரக்ருதிகளின் சூழ்ச்சியால் திராவிட வேதத்தில் மக்களுக்கு கலக்கம் ஏற்பட்டு நாளடைவில் அவற்றை மறந்து போனார்கள். மதுரமான தமிழ் பாசுரங்கள் மறைந்தும் போயின. அச்சமயத்தில் திருக்குடந்தை ஆராவமுதனின் காருண்யத்தால் ஆழ்வார் திருநகரி சென்றடைந்து, மதுரகவியாழ்வாரின் சிஷ்ய பரம்பரையினர் மூலம் கண்ணிநுண் சிறுத்தாம்பைப் பெற்று அதனைப் பல்லாயிரம் முறை பாராயணம் செய்து ஆழ்வாரை ஸாக்ஷாத்கரித்து தமிழ் வேதங்களை மீட்டெடுத்து அவற்றைத் திரும்பவும் உலகில் நடையாடச் செய்தவர் ஸ்ரீமந் நாதமுனிகள்.



ஆகவே இவருக்கும் ஸ்ரீ ஹயக்ரீவனுக்கும் ஒப்புமை அதிகம். அதனாலேயே ஸ்ரீ ஆளவந்தார், எம்பெருமானின் மற்ற அவதாரங்கள் இருக்க ஸ்ரீ ஹயக்ரீவ அவதாரத்தை முதலில் இவர் விஷயத்தில் அருளிச் செய்தது இங்கு நன்கு சுவைக்க த்தக்கது.

இப்படி நம் சிந்தைக்கு அப்பாற்பட்ட, எண்ணிப் பார்க்கமுடியாத, வியக்கும்படியாய் உள்ள, இயல்பாய் அமைந்த சிறந்த ஜ்ஞானம் மற்றும் வைராக்யத்தின் குவியல் போன்றவர் ஸ்ரீமந் நாதமுனிகள். எம்பெருமானிடத்தில் கரை காணமுடியாத ஆழமான பக்தியை உடையவர், நம் ஸித்தாந்தத்திற்கும், ஸம்ப்ரதாயத்திற்கும் எல்லா வகையிலும் கூடஸ்தராய் எழுந்தருளியிருப்பவர், மனனசீலர், ஸதா பகவத் த்யான நிஷ்டர், யோக நிஷ்டர் என்று இவர் பெருமையைப் பேசித் தலைக்கட்ட முடியாது.

**தூதனுமாம் நாதனுமாம் என்னைப் பற்றி சோகம் தீர்** -- என்று கீதாசார்யன் தானே வெளியிட்டருளினான். அப்பாண்டவ**தூதன்** காட்டிய படி **நாதனான** ஸ்ரீமந் நாதமுனிகளின் திருவடிகள் இந்த ப்ரக்ருதி மண்டலம் மற்றுமில்லாமல் ஸ்ரீவைகுண்டம் சென்றபோதும் எப்போதும் நமக்கு உபாயமாகவும் உபேயமாகவும் ஆகவேண்டுமென ப்ரார்த்திப்போம்.

## தேசிக மொழி

“தேவதிராஜனின் திருவடிகளில் சரணாகதி செய்து புஷ்பங்களைப் பறித்து என் நாதனான அவன் செவ்வடிகளில் சேர்த்து நல்ல நீரையும் தூப தீபங்களையும் வாசனை தரும் வெற்றிலையையும் ஸமர்பித்து, ப்ராஸாதம், கறி, சர்க்கரை லட்டு, சீடை ஆகியவற்றையும் ஸமர்பித்து, மறுபடி மந்த்ரங்களை ஜபம் செய்து அந்த வரதனை த்யானம் செய்யுங்கள்” என்று சதுர்முக ப்ரஹ்மா முனிவர்களுக்கு உபதேசம் செய்தருளினார்.

– மெய்விரத மான்மியம்

ஸ்ரீ:

# முப்பதில் ஐந்து

ஸ்ரீமதி பழவேரி ரமா ராகவஸிம்ஹன்

ஸுக்ருத விசேஷத்தினால் ஸ்ரீமந்நாராயணனே அடையப்படைய வேண்டிய புருஷார்த்தம் என்ற தெளிந்த ஜ்ஞானமுடையோர், காணப்பட வேண்டியவனான அவனைக் காண்கைக்கு ஸாதநமாகும் கண்ணும் அவனே என்பர். கர்மானுகுணமாக தன்னைக் காணாரையும் (கூடாரை வெல்லும் சீர் கோவிந்தன்), ஸுக்ருதத்தினால் தன்னை காண்பவரையும் தாரதம்யமின்றி ரக்ஷிக்கிறான் எம்பெருமான். தனது ரக்ஷண கார்யத்திற்காக ஆழ்வார் ஆசார்ய சிரோன்மணிகளைப் படைப்பித்து, ஸம்ப்ரதாய ஸம்ருத்திக்கு வழிகோலுகிறான்.

எம்பெருமானின் அம்சங்களாக அவதரித்த ஆழ்வார்களுள் பெரியாழ்வார் புத்ரியாக ஜனித்த பூமிப்பிராட்டி விசிஷ்டாத்வைதத்தின் அஸ்திவாரங்களை ஆச்ரிதர்களிடம் கொண்டு சேர்க்கவென உபய வேதாந்தத்தின் ஸாரமாம் திருப்பாவையை அநுக்ரஹித்தாள். திருப்பாவையின் முப்பது பாசுரங்களில் பொதிந்துள்ள ஆழ்ந்த ரஹஸ்யங்களைப் பற்றின ஜ்ஞானமென்பது, எம்பெருமானை அடைய ஜீவாத்மா மேற்கொள்ளும் ப்ரயத்தனங்களுக்கு ஊன்றுகோலாக அமைகிறது.

மோக்ஷத்தினை அபேக்ஷிக்கும் முமுக்ஷு முக்தனாவதற்கு பரமாத்ம ஸ்வரூபம், ஜீவாத்ம ஸ்வரூபம், உபாய ஸ்வரூபம், உபேய ஸ்வரூபம், விரோதி ஸ்வரூபம் எனும் ஐந்து விஷயங்களைப் பற்றின தெளிந்த ஜ்ஞானம் அவச்யமாகிறது. **அர்த்த பஞ்சகம்** எனப்படும் இவ்விஷயத்தினைப் பற்றின ஜ்ஞானம் ஜீவாத்மா பரமாத்மா ஸாயுஜ்யத்திற்கு இன்றியமையாதது.

கோதை நாச்சியாரின் திருப்பாவை முழுவதும் நிறைந்திருக்கும் அர்த்த பஞ்சகத்தில் அந்வயித்து பூமாலை சூடிக் கொடுத்தவள் நாயகனின் கருணைக்குப் பாத்ரராவோம்.

**பரமாத்ம ஸ்வரூபம்**

ஸ்ரீமந்நாராயணனே பரதத்வம். அனைத்தும் அவனது அதீனமே. ஸ்ருஷ்டி கார்யம், ரக்ஷண கார்யம், ஸம்ஹார கார்யம் என்று அனைத்தையும் ஸங்கல்ப மாத்ரத்தில் செய்யும் வல்லமையும் சக்தியும் உடையவன் அவனே. மோக்ஷத்தை அநுக்ரஹிக்கவல்ல எம்பெருமானே பரமாத்ம ஸ்வரூபம் என்பதை திருப்பாவையின் பற்பல பாசுரங்கள் மூலம் அடையாளம் காட்டுகிறாள் பெரியாழ்வார் புத்ரி.

1. **நாராயணனே நமக்கே பறை தருவான்** – ந ச புநராவர்த்ததே, ந ச புநராவர்த்ததே - புநராவ்ருத்தி (புநர்ஜன்மம்) இல்லாத மோக்ஷத்தினை அநுக்ரஹிக்க வல்லவன் அவனொருவனே
2. **பாற்கடலுள் பையத் துயின்ற பரமன்** – க்ஷீராப்தி நாதனான எம்பெருமான்
6. **வெள்ளத்தரவில் துயிலமர்ந்த வித்து** - திருப்பாற்கடல் வாஸன்
8. **தேவாதிதேவன்** - அனைத்து தேவதாந்தரங்களுக்கும் தலைவன்
10. **பறை தரும் புண்ணியனால்** - மோக்ஷம் அநுக்ரஹிப்பவன்
11. **முகில்வண்ணன்** – சித், அசித் என அனைத்தின் உள்ளும் புறமும் வ்யாபித்து அவற்றை தரித்து நிற்பவன்
12. **மனத்துக்கினியான்** - இவ்வுலகில் அர்ச்சாரூபியாக கர்மபத்தர்களாலும், விரஜையைக் கடந்த பின்னர் அஷ்டகுண ஆவிர்பாவத்தினால் கர்மாதீதனாகும் ப்ரபந்ந ஜீவனாலும் அநுபவிக்கப்படுபவன்
20. **முப்பத்து மூவர் அமரர்க்கு முன்சென்று கப்பம் தவிர்க்கும் கலியே** - அந்திம க்ஷணத்தில் ஜீவனின் பயத்தைப் போக்குபவன்
21. **உன் வாசற்கண் வந்து** – ஸ்ரீவைகுந்தவாசன்
22. **கிங்கிணி வாய்ச்செய்த தாமரைப் பூப்போலே செங்கண் சிறிச்சிறிதே எம்மேல் விழியாவோ** - கடாக்ஷத்தினால் அனைத்தையும் ரக்ஷிப்பவன்
23. **பூவைப்பூ வண்ணா** - ச்ரிய:பதி / ஏக மிதுனம்
24. **என்றென்றும் உன் சேவகமே ஏத்திப் பறை கொள்வான்** - சேஷபூதர்களுக்கு மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை அநுக்ரஹிப்பவன்
25. **நெடுமாலே பறை தருதியாகில்**
29. **நீ குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது** - அவனே நிருபாதிக சேஷி

**ஜீவாத்ம ஸ்வரூப லக்ஷணங்கள்**

மனோ, வாக், காயத்தினால் எம்பெருமானது சேஷனாக வர்திப்பது ஒன்றே ஜீவாத்மாவின் ஸ்வரூப லக்ஷணம் என்பதை பல திருப்பாவை பாசுரங்கள் மூலம் பரமகாருண்யத்துடன் காண்பித்துக் கொடுக்கிறாள் கோதா பிராட்டி.

1. **நீராடப் போதுவீர்**
2. **பையத் துயின்ற பரமனடி பாடி**
3. **நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீராடினால்**
4. **நாங்களும் மார்கழி நீராட** - ஆச்ரிதர்களின்



ஆகிஞ்சன்யம், அநந்யகதித்வம்

5. **தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித் தொழுது வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க** - சாஸ்த்ரத்தினைக் கைவிளக்காகக் கொண்டு

6. **உள்ளம் புகுந்து குளிர்ந்து** - ஹ்ருதயத்தில் இருத்தி பக்தி செய்து

7. **நாராயணன் மூர்த்தி கேசவனைப் பாடவும்**

8. **தேவாதி தேவனை சென்று நாம் ஸேவித்தால்** - அர்ச்சாமூர்த்திகளை ஸேவித்து

9. **மாமாயன் மாதவன் வைகுந்தன் என்று நாமம் பலவும் நவின்றேல்**

10. **நம்மால் போற்ற** — பாகவத சேஷத்வத்துடன் வர்த்தித்து

11. **முகில்வண்ணன் பேர் பாட**

12. **மனத்துக்கினியானைப் பாடவும் நீ வாய் திறவாய்**

13. **கீர்த்திமைப் பாடிப் போய்**

14. **பங்கயக் கண்ணானைப் பாடேல்**

15. **மாயனைப் பாடேல்**

16. **தூயோமாய் வந்தோம் துயிலெழப் பாடுவோம் / நீ நேய நிலைக்கதவம் நீக்கு** - பாகவதர்கள் பரஸ்பரம் சேஷி-சேஷ பாவத்துடன் இருத்தலின் அவச்யம்

17. **செம்பொற்கழலடிச் செல்வா** - எம்பெருமான் திருவடி பணிதல்

18. **உன் மைத்துனன் பேர் பாட** - பிராட்டியின் கருணை / புருஷகாரம்

19. **உன் மணாளனை** - தேவதாந்தர ஸம்பந்தமின்றிக்கே வர்த்திப்பது

20. **உன் மணாளனை** - ஜீவாத்மா பரமாத்மா ஸாயுஜ்யம்

21. **போற்றி யாம் வந்தோம்**

22. **வந்து தலைப்பெய்தோம்** - அநந்ய ப்ரயோஜனராய் வர்த்திப்பது

23. **யாம் வந்தோம்** - உபாயத்தை அநுஷ்டித்தல்

24. **என்றென்றும் உன் சேவகமே ஏத்தி** - எம்பெருமானை சேஷியாகக் கொண்டிருப்பது

25. **உன்னை அருத்தித்து வந்தோம்** - மஹாவிச்வாஸத்து டன் எம்பெருமானைப் பற்றிக் கொள்ளுதல்

26. **மேலையார் செய்வனகள் வேண்டுவன** - பூர்வர்கள் காட்டிய வழியில் நடத்தல்

27. **உன்தன்னைப் பாடிப் பறைகொண்டு யாம் பெறும் சம்மானம்** - அவனைப் போற்றுவதனால் பெறும் கிடைத்தற்கரிய பலன்கள்

28. **உன்தன்னோடுறவேல் நமக்கிங்கு ஒழிக்க ஒழியாது** — சேஷி-சேஷ பந்தம்

29. **எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு உற்றோமேயாவோம் உமக்கே நாமாட்செய்வோம்** - நியந்தா நியாம்ய ஸம்பந்தம்

30. **சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே இங்கிப் பரிசுரைப்பார்**

**உபேய ஸ்வரூபம்**

ஒப்பாரும் மிக்காரும் இல்லாத எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே ஆச்ரிதர்கள் அடைய

வேண்டிய உபேயம் என்பதை அவன் கொண்ட விபவாவதாரங்களைக் கூறி தெள்ளத் தெளிவாகக் காண்பிக்கிறாள் கோதை நாச்சியார்.

3. **ஓங்கி உலகளந்த உத்தமன்** – அனைத்து லோகங்களையும் தனது அதீனத்தில் கொண்டவன்
4. **பற்பநாபன்** – ஸ்ருஷ்டி கார்ய கர்த்தாவான ப்ரஹ்மனையே படைத்தவன்
5. **தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனை** – ஈரேழு லோகங்களையும் தனது திருவாயினுள் காண்பித்து, தானே ஈச்வர தத்வம் என்பதை உணர்த்தியவன்
7. **நாராயணன் மூர்த்தி கேசவன்**
9. **மாமாயன் மாதவன் வைகுந்தன்** - ஆயிரம் திருநாமங்களைக் கொண்டவன்
13. **புள்ளின் வாய் கீண்டானைப் பொல்லா அரக்கனை கிள்ளிக் களைந்தான்** - வீரத்தின் உருவம்
14. **சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்**
15. **வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க வல்லான்**
16. **மாயன் மணிவண்ணன்**
17. **அம்பர மூடறுத்து ஓங்கி உலகளந்த உம்பர் கோமான்**
18. **உந்து மதகளிற்றன் ஓடாத தோள்வலியன்**
19. **நப்பின்னை கொங்கைமேல் வைத்துக்கிடந்த மலர்மார்பன்**
26. **மாலே மணிவண்ணன்**
27. **கூடாரை வெல்லும் சீர் கோவிந்தன்** - திருக்கல்யாண குணங்கள் நிறைந்தவன்
28. **குறையொன்றுமில்லாத கோவிந்தன்** - குறையொன்றும் இல்லாதவன்
30. **வங்கக் கடல் கடைந்த மாதவன் கேசவன்... ஈரிரண்டு மால்வரைத்தோள் செங்கண் திருமுகத்து செல்வத் திருமால்**

**உபாய ஸ்வரூபம்**

அடையப்பட வேண்டிய உபேயமாகும் அவனை அடைய அவனே உபாயமாகிறான் என்று பொருள் கொள்ளும் திருப்பாவை பாசுரங்கள் பல.

1. **நாராயணனே நமக்கே பறை தருவான்** - அவனே உபாயம் எனும் ஏகாரம்
8. **ஆவாவென்று ஆராய்ந்து** - அநுஷ்டிக்கப்பட்ட உபாயத்திற்குண்டான பலனை அருள்வான்
20. **உக்கமும் தட்டொளியும் தந்து** - ஆச்வாஸப்படுத்தி உபாய நிஷ்டரை மூர்த்தந்ய நாடியில் ப்ரவேசிப்பித்து அர்ச்சிராதி மார்கத்தில் ப்ரயாணிக்கச் செய்து மோக்ஷம் அநுக்ரஹிப்பான்
23. **யாம் வந்த காரியம் ஆராய்ந்தருள்** - தானே ஸித்தோபாயனாவான்
24. **இரங்கேல்** - மோக்ஷ பலம் ஸங்கல்பிப்பவன்
26. **அருளேல்** - பலம் அருளும் திருவடிகள் கொண்டவன்
28. **இறைவா நீ தாராய் பறை** - சாச்வதமான ஸந்தோஷத்தினை அருள்பவன்
29. **இற்றைப் பறைகொள்வான்** - தாரதம்யமில்லாத ஸாயுஜ்யத்தினை அநுக்ரஹிப்பவன்
30. **திருமாலால் எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர்** - உபாஸனத்திற்கேற்ற பலனை அருளி உபாயமாகிறான்

**விரோதி ஸ்வரூபம்**

கோதா பிராட்டி தான் பாவை நோன்பு நோற்க ஆரம்பித்த காலக்ரமத்தை (மார்கழித் திங்கள்) திருப்பாவையின் முதல் பாசுரத்தில் ஸேவித்து, இரண்டாம் பாசுரத்திலேயே ப்ராப்ய, விரோதி ஸ்வரூபங்கள் எவையெவை என்று காண்பிக்கிறாள். மூன்றிலிருந்து இருபத்தியெட்டு வரையிலான பாசுரங்களில் பரமாத்ம-ஜீவாத்ம உபாய-உபேய ஸ்வரூபங்களை விளக்குபவள், இருபத்து ஒன்பதாம் பாசுரத்தில் உபாய விரோதி ஸ்வரூபத்தினைக் காண்பித்து, முப்பதாம் பாசுரத்தினை பலச்ருதியாக ஸேவிக்கிறாள்.

2. **தீக்குறளை சென்றோதோம் நெய்யுண்ணோம் பாலுண்ணோம் மையிட்டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம் செய்யாதன செய்யோம் ஐயமும் பிச்சையும் ஆந்தனையும்** - தேஹத்திற்குச் செய்யும் அலங்காரங்கள், உபசாரங்கள், தகாத சொற்களைப் பேசுவது, அநித்யமான யாக, ஹோமம், தானங்கள் அருளும் ஸ்வர்கம் முதலான ஐச்வர்யங்களை அபேக்ஷிப்பது ஆகியவை ப்ராப்ய விரோதிகள்
29. **மற்றை நம் காமங்கள் மாற்றேல்** - எம்பெருமானை ஸ்வயம் ப்ரயோஜனமாகப் பற்றத் தடையாக இருக்கும் பாபங்கள், சங்கைகள் ஆகியவை உபாய விரோதிகள்

கைங்கர்ய ஸாம்ராஜ்யத்தினை ஜீவன் இழந்து இழிந்ததற்கு ப்ரதானமான காரணம் **விரோதி ஸ்வரூபம்.** ஆகிஞ்சன்யமும் அநந்யகதித்வமுமே **ஜீவாத்ம ஸ்வரூபம்.** ஜீவன் சரணடையத் தக்கவனான ஸ்ரீமந்நாராயணனே **பரமாத்ம ஸ்வரூபம். உபேய ஸ்வரூபம்** ஆகும் பரமாத்மனை அடைவதற்கு அவனே **உபாய ஸ்வரூபம்** ஆகிறான். ஒப்புயர்வற்ற இந்த ஸித்தாந்தத்தினை (விசிஷ்டாத்வைதம்) ஜ்ஞானஹீனர்களும் உள்ளங்கை நெல்லிக்கனியாய் உணரும் வண்ணம் ஸ்ரீஸூக்திகளை அநுக்ரஹித்த கோதா பிராட்டியின் திருவடிகளே சரணம்.

# Srimath Rahasya-Thraya Saaram

## A Manual For Beginners ⑮

Smt. Padmalatha Sridharan, Chennai

**Chapter - 14**

**Svanishtabhijna Adhikaram**

Nishta can be loosely translated to mean being steadfast or being rooted. The three types of Nishta are 1. Svarupa Nishta 2. Upaaya Nishta and 3. Purushaartha Nishta.

A Chetana is said to be rooted in his Svarupa if:

1. He doesn't feel sad when somebody harasses him with harsh words and so on, since he knows that they do not apply to his blemishless soul and only related to bodily things.
2. He feels charitable towards them and sorry for them because his sins are transferred to them.
3. He feels grateful to them because they ensure his humility and remind him of his shortcomings.
4. He is unaffected by their conduct as he knows that all beings are dependent upon Bhagavan and bound by their karmas and this conduct is caused by karma and hence it is His will that one is subject to such disturbing actions.
5. Above all this, if he is happy that his Praarabda Karma is depleted to that extent by their actions and remains favourable towards all existing beings, he is said to be rooted in Pranava, Namas Sabdartham, and his Aakinchanyam, Seshathvam and Paarathanthryam have become fruitful. He has complete Svarupa Nishtai.

He is rooted in Upaaya if:

1. He doesn't have any refuge in himself or anyone else other than Isvara.
2. If he faces near-fatal circumstances or scary conditions and then too he is unfazed by them and he awaits his death happily having accomplished all that he could here and remains in anticipation of the pure bliss that is going to be his.
3. He lives his life with Sita Piratti in Ashokavanam as his role-model. Though Sita Piratti could have destroyed Ravana in seconds and left Lanka, she stayed put because she was dependent (Parathanthrai) on Rama. Similarly, the Chethana will remain confident that He has put us in this Samsara, and He will release us at the requested time.
4. To extend no more efforts for Moksha since responsibility has already been handed over to Him.
5. In the meantime, till ascension, any desired results or removal of any impediments is His will, thus accepting and facing everything. This will prove that he is rooted in Upaaya as shown in the three Rahasyas.


He is rooted in Purushaartha (Phalan) if:

1. Whatever he faces during his time left in this world, they are all due to his Praarabda Karma and if he is cognisant of this fact, he would not cry or whine. Everything happens as per His will and should be accepted as such as said by Sri Parasara in Mahabaratham and sage Ajakara to Prahlada. Thus, if some harm befalls him, he should remain unaffected by it and console himself that his Praarabda-caused debts are being paid.
2. If he is excited about the Purushaartham awaiting him and expresses often that he should attain it soon without delay, he is said to be rooted in Purushaartham as shown in the three Rahasyas in a limited manner. Swami quotes the analogy of a sea marked by hand in the map, etc., since actual experience cannot be measured or expressed in worldly terms.

If a Prapanna is thus conscious that he is not the body but the Athma inside and he is always subservient to and dependent upon Him and he has surrendered unto Him in the desire of doing Kainkaryam, he will not venture upon misdeeds (Apacharam) and material pleasures. Even if they happen, inadvertently, he will not be sucked into them.

*(to be continued…)*

ஶ்ரீ:



## *With Pranams:*

**Shri Thenandal Enterprises**
82/98, Sri Lakshmi Nagar,
I Main Road, Alwar Thirunagar,
Chennai 600 087.

**SVDD thanks Shri Thenandal Enterprises**
for sponsoring this month's issue of Desika Sandesam

**Sponsorships and donations towards publication expenses are welcome**

ஸ்ரீ:



ஸ்ரீஅலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீவிஜயவல்லீ ஸமேத ஸ்ரீஹேதிராஜ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ராமானுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ப்ரதிபடஶ்ரேணீபீஷண வரகுணஸ்தோம பூஷண
ஜநிபயஸ்தாந தாரண ஜகதவஸ்தான காரண ।
நிகில துஷ்கர்மகர்ஶந நிகமஸத்தர்மதர்ஶந
ஜய ஜய ஸ்ரீஸுதர்ஶந ஜய ஜய ஸ்ரீஸுதர்ஶந॥ – ஸ்ரீஸுதர்ஶநாஷ்டகம்

# ஸ்ரீ ஸுதர்ஸன மஹாயஜ்ஞ பத்திரிகை 2024

ஶ்ரிய: பதியான ஸ்ரீமந் நாராயணனே ''அஹமேவ–வேத்ய:'' என்கிறபடி மாடமாமயிலை ஸ்ரீவேதாந்த தேஶிகன் ஸந்நிதியில் எழுந்தருளி பக்த ஸம்ரக்ஷணம் செய்து வருகிறார். பரமகாருணிகரான ஸ்ரீ ஸர்வேஸ்வரனுக்கு ஸர்வசக்திகளில் இச்சாசக்தி, க்ரியாசக்தி என்கிற இரு விசேஷமான சக்திகள் உண்டு. இச்சாசக்தி ஸ்ரீமஹாலக்ஷ்மியும், க்ரியாசக்தி ஸ்ரீ சக்ரரூபமான ஸ்ரீ ஸுதர்ஸந ஆழ்வானும் ஆவார்கள். பகவான், ஸ்ரீஸுதர்ஸநனைக்கொண்டு ஸகல பாபங்களையும், எல்லாவிதமான தோஷங்களையும், கஷ்டங்களையும் விலக்கி அடியார்களுக்கு ஸகலவிதமான க்ஷேமங்களையும் அளிக்கிறான். மேற்படி நம் தேவஸ்தானத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ ஸுதர்ஸநாழ்வார்க்கு நாளது க்ரோதி ஷூ ஆனி மீ 30ம் தேதி (14.07.2024) ஞாயிற்றுக்கிழமை பிரபல ஆகம விற்பன்னர்களால் ஸ்ரீமஹா ஸுதர்ஸந ஹோமம் நடத்திக் கொள்வதாக திருவுள்ளம் பற்றியிருக்கிறான். இவ்வைபவத்தில் ஆஸ்திகோத்தமர்கள் ஸகல விதத்திலும் கலந்து கொண்டு ஸ்ரீஸுதர்ஸந ஆழ்வார் க்ருபாகடாக்ஷத்திற்கு பாத்திரர்களாகும்படி ப்ரார்த்திக்கிறோம்.

*தர்மகர்த்தாக்கள்*

R. ராகவன் R. அனந்த பத்மநாபன் R. முகுந்தன்

## உற்சவ விவரம் / நிகழ்ச்சி நிரல்

*14.07.2024 - ஞாயிற்றுக்கிழமை*

*காலை 8.00 முதல் - ஸ்ரீஸுதர்ஸந ஹோமத்திற்காக அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தணம், சதுஸ்தானார்ச்சனை (கும்பம், மண்டலம் ஆராதனம்), ஸங்கல்பம்*

*காலை 10:00 மணி - ஹோமம் ஆரம்பம்*

***மதியம் 12:00 மணி - பூர்ணாஹுதி***

*மதியம் 12:30 மணி - ப்ரஸாத விநியோகம்*

**ஸங்கல்ப நன்கொடை ரூ. 1000/-**

ஸேவார்த்திகள் ஹோமத்திற்குண்டான பசுநெய், தேன்,
பழங்கள், புஷ்பங்கள் போன்ற திரவியங்கள் மற்றும் நன்கொடைகளை
தேவஸ்தான அலுவலகத்தில் நேரில் செலுத்தலாம்



வஸந்தோத்ஸவம்